Centre for Research on Successful Ageing

செய்திக்கடிதம்-இதழ் 08 மே 2022

இந்த இதழில், நடைபெற்றுக்கொண்டிருக்கும் எங்களின் பணித்திட்டங்களைப் பற்றி உங்களுக்குத் தெரியப்படுத்துகிறோம், வருமானம் மற்றும் செல்வம் பற்றிய கேள்விகளைக் களமிறக்குவதற்குப் பின்னால் உள்ள உந்துதல்களைப் பற்றி விவாதிக்கிறோம், மேலும் சிங்கப்பூரில் பணிஓய்வு மற்றும் மறுவேலைநியமன விழிப்புணர்வு குறித்த முக்கியக் கண்டுபிடிப்புகளை வழங்குகிறோம்!

## SLAக்கான வயதுத் தகுதி

சமீபத்தில் SLP உறுப்பினர்களிடமிருந்து நாங்கள் பெற்ற கேள்விகளைக் கருத்தில் கொண்டு, 2015-இல் SLP உறுப்பினர் தகுதிக்கான அசல் வயது வரம்பு 50 முதல் 70 வயது வரை (இவ்வயது வரம்பிற்குள் உள்ளவர்களின் வாழ்க்கைத் துணைவர்கள் உட்பட) என்றிருந்த நிலையில், அவ்வசல் உறுப்பினர்களில் பலர் இப்போது 70 வயதுக்கு மேற்பட்டவர்களாக இருக்கிறார்கள் என்பதையும் அவர்கள் தொடர்ந்து SLP-க்குப் பங்களிக்கின்றனர் என்பதையும் ROSA குழு எடுத்துக்காட்ட விரும்புகிறது. எனவே, SLP-இல் நீடிப்பதற்குத் தகுதியற்றவராக மாறிடுவீர்கள் என்று உங்களுக்கு ஏதேனும் கவலைகள் இருந்தால், 2015-இல் SLP-இன் ஓர் அங்கமாக இருக்க நீங்கள் தகுதி பெற்றிருந்த பட்சத்தில், நீங்கள் தொடர்ந்து தகுதியுடையவராகவே நீடிப்பீர்கள் என்பதை உறுதிபட கூறுகிறோம். உங்கள் அர்ப்பணிப்பை நாங்கள் பெரிதும் பாராட்டுகிறோம் மற்றும் உங்கள் துடிப்பான பங்கேற்பை மதிக்கிறோம்!

## ROSA சிறப்பம்சங்கள்

ஜனவரி 2022 இல், ROSA, 'En Community Services Society' உடன் கூட்டுசேர்ந்து, "மூப்படைந்தவர்களிடையே குடிமை ஈடுபாட்டை அதிகரிக்க, சமூக அடிப்படையிலான மற்றும் பங்கேற்பாளர் தலைமையிலான முன்முயற்சிகள்" என்ற ஒரு முன்னோடித் திட்டத்தை அறிமுகப்படுத்தியது. இது முதியவர்கள் தங்கள் சுற்றுப்புறத்தில் சமூக முயற்சிகளை ஏற்பாடுசெய்ய ஊக்குவிக்கிறது.



*ROSA குழு குடியிருப்பாளர்களுடன் நோக்கக் குழுக்களை நடத்துகிறது*

தெம்பனிஸில் வசிக்கும் 20 மூப்படைந்தோர்களுடன் தொடர்ச்சியான ஆழ் நோக்கக் குழு விவாதங்களுடன் இந்தத் திட்டம் தொடங்கப்பட்டது. சுறுசுறுப்பாக நீடித்தல், சமூக நடவடிக்கைகளில் பங்கேற்பது மற்றும் இளைய தலைமுறையினருடன் தொடர்புகொள்வது பற்றிய அவர்களின் கருத்துகளைக் கேட்டு மகிழ்ந்தோம். தற்போது, இத்திட்டத்தின் இரண்டாம் கட்டத்திற்கு நாங்கள் தயாராகி வருகிறோம்: 12-மாத ஈடுபாடு, இதில் மூத்தவர்களுக்கு ROSA மூலம் முழுமையாக நிதியளிக்கப்பட்ட சமூக நிகழ்ச்சிகளை நடத்துவதற்கான தளம் வழங்கப்படும்.

ROSA குழு, இம்மாதிரியான சமூக-அடிப்படையிலான ஈடுபாட்டு மாதிரிகள் உள்ளூர்ச் சமூகங்களுக்குப் பெயர்க்கக்கூடியவையா என்பதைப் புரிந்துகொள்வதை எதிர்நோக்குகிறது. இந்நிகழ்ச்சியின் முதல் பகுதியை வெற்றியடையச் செய்ததற்காக En Community Services Society-க்கும் SMU மற்றும் Temasek Junior College-இன் மாணவத் தொண்டூழியர்க் குழுவிற்கும் நன்றி தெரிவிக்க விரும்புகிறோம்!

## செல்வம் மற்றும் வருமானம் தொடர்பான கேள்விகளின் கொள்கைத் தாக்கம்

செல்வம் மற்றும் வருமானம் குறித்து ROSA ஏன் மாதாந்திர கேள்விகளைக் கேட்கிறது? இக்கேள்விகளைக் கருத்தாய்வு செய்ததன் பின்னணியில் உள்ள உந்துதல்கள் மற்றும் சிங்கப்பூரின் கொள்கை வகுப்பில் அதன் தாக்கம் குறித்து ROSA-வின் துணை இயக்குநர், இணைப் பேராசிரியர் சியோங்ஹூன் கிம் அவர்கள் கூறுவதற்கு நாங்கள் செவிமடுக்கிறோம்.



*ROSA-வின் துணை இயக்குநர், இணைப் பேராசிரியர் சியோங்ஹூன் கிம்*

டாக்டர் கிம்மின் கருத்துப்படி, வருமானமும் செல்வமும் வயதான காலத்து நல்வாழ்வின் முக்கியக் கூறுகளாகும். குடும்ப வருமானம் மற்றும் செல்வம் பற்றிய தகவல்கள், எங்கள் SLP உறுப்பினர்களின் பொருளாதார நல்வாழ்வைப் பற்றிய கடுமையான பகுப்பாய்வுகளை மேற்கொள்ள ROSA-வை அனுமதிக்கிறது.

கடந்த ஆறு ஆண்டுகளில் சேகரிக்கப்பட்ட உயர்தரத் தரவுகளின் மூலம், ROSA ஆராய்ச்சியாளர்கள் மூத்த சிங்கப்பூரர்களின் வருமானம் மற்றும் செல்வ இயக்கவியலைப் புரிந்துகொண்டு அரசாங்கக் கொள்கைகளின் தாக்கங்களை ஆவணப்படுத்த முடிந்தது. SLP தரவைப் பயன்படுத்தி, 55 வயதில் பகுதியளவு மசேநி(CPF)-யைத் திரும்பப் பெறுவது உடல்நலம் மற்றும் அகநிலை சார்ந்த நல்வாழ்வை எவ்வாறு மேம்படுத்துகிறது என்பதை டாக்டர் கிம் அவர்கள் காண்பித்துள்ளார். மற்றோர் ஆய்வில் அவர், கோவிட்-19 தொற்றுநோய்களின் போது அரசாங்கத்தின் ரொக்கப் பரிமாற்றங்கள் குறைந்த வருமானம் மற்றும் குறைந்த செல்வம்

கொண்ட குடும்பங்களில் மிகவும் பயனுள்ளதாக இருந்தன என்பதை விளக்குவதற்கு SLP-இன் செல்வத் தரவைப் பயன்படுத்தினார்.

இத்தகைய ஆராய்ச்சியின் மூலம், SLP தரவுகள் போன்ற உயர்தரத் தரவுகளிலிருந்து பெறப்பட்ட கொள்கைத் தாக்கங்கள், மூத்த சிங்கப்பூரர்களின் பொருளாதார நல்வாழ்வை மேம்படுத்தும் கொள்கைகளை வடிவமைக்க, கொள்கை வகுப்பாளர்களுக்குத் தகவல்களை அளிக்கலாம்.

தரவுப் பாதுகாப்பை நாங்கள் தீவிரமாக எடுத்துக்கொள்கிறோம் என்பதை ROSA குழு எங்கள் SLP உறுப்பினர்களுக்கு உறுதியளிக்க விரும்புகிறது. எங்களுக்கு வழங்கப்படும் அனைத்துப் பதில்களும் எங்கள் சேவையகங்களில் பாதுகாப்பாக வைக்கப்படும் மற்றும் ஆராய்ச்சி நடத்தும் நோக்கங்களுக்காக மட்டுமே பயன்படுத்தப்படும். எங்கள் அறிக்கைகளில் பயன்படுத்தப்படும் எந்தத் தரவும் எப்போதும் பெயரிடப்படாமலும் ஒருமுகப்படுத்தப்பட்டதாகவும் இருக்கும். உங்கள் அடையாளத்தை சமரசம் செய்யக்கூடிய தனிப்பட்ட முறையில் அடையாளம் காணக்கூடிய தரவுகள் எத்தகைய சூழ்நிலையிலும் எங்கள் குழுவால் பகிரப்படாது.

## ஆராய்ச்சியின் சிறப்பம்சங்கள்

ஜனவரி 2022 இல், சிங்கப்பூரில் உள்ள பணிஓய்வு மற்றும் மறுவேலைநியமன வயது குறித்த உங்களின் விழிப்புணர்வைப் பற்றிக் கேட்டோம். சிங்கப்பூரின் பணிஓய்வு வயதை அறிந்த SLP பதிலாளர்களின் விகிதத்தைக் கீழே உள்ள படம் காட்டுகிறது.




*படம் 1: பணிஓய்வு வயது விழிப்புணர்வு விநியோகம்*

எங்கள் பதிலாளர்களில் கணிசமான பகுதியினர் (74.74%) சிங்கப்பூரில் பணிஓய்வு பெறும் வயதைப் (62) பற்றிய விழிப்புணர்வைக் காட்டியது எங்களுக்கு ஊக்கமளிக்கிறது, இருப்பினும் கால் பகுதியினர் (25.26%) இதைப் பற்றி அறிந்திருக்கவில்லை. எவ்வாறாயினும், அனைத்துச் சிங்கப்பூரர்களுக்கும் இருக்கும் ஒரே நிலையான பணிஓய்வு வயதைப் போலன்றி, அதிகபட்ச மறுவேலைநியமன வயது தனிநபரின் பிறப்புக் குழுவின் படி மாறுபடும். கீழேயுள்ள அட்டவணை வெவ்வேறு பிறப்புக் குழுக்களின் (2022 நிலவரப் படி) வெவ்வேறு மறுவேலைநியமன வயதைக் குறிக்கிறது.

| பிறந்த நாள் | மறு-வேலை நியமன வயது |
|---|---|
| ஜூலை 1, 1952க்கு முன் | 65 |
| 1 ஜூலை 1952 முதல் 30 ஜூன் 1955 வரை | 67 |
| 1 ஜூலை 1955 அல்லது அதற்குப் பிறகு | 68 |

*அட்டவணை 1: பிறப்புக் குழுவுக்கு ஏற்ப மறுவேலைநியமன வயது*

பணிஓய்வு வயது பற்றிய விழிப்புணர்வுக்கு மாறாக, குறைவான பதிலாளர்களே தங்கள் பிறப்புக்குழுவுக்கான மறுவேலைநியமன வயதை அறிந்திருந்தனர்.




*படம் 2: தங்களது சொந்தப் பிறப்புக்குழுவின் மறுவேலைநியமன வயது குறித்து சரியான, தவறான விழிப்புணர்வு மற்றும் விழிப்புணர்வின்மை ஆகியவற்றை வெளிப்படுத்திய நபர்களின் விநியோகம்.*

படம் 2 இல் காட்டியுள்ளது போன்று, ஒவ்வொரு குழுவிற்குள்ளும், தங்கள் சொந்த மறுவேலைநியமன வயதைச் சரியாகக் கண்டறிந்த தனிநபர்களின் விகிதம் சிறியதாக இருந்தது: 1 ஜூலை 1952க்கு முன் பிறந்தவர்களில் 21.94%, 1 ஜூலை 1952 முதல் ஜூன் 30 வரை பிறந்தவர்களில் 15.24% 1955, மற்றும் ஜூலை 1, 1955 முதல் பிறந்தவர்களில் 12.96%.

2022 ஆம் ஆண்டில் மறுவேலைநியமனச் சட்டம் எவ்வாறு மாறியுள்ளது என்பதைப் படிக்குமாறு எங்கள் SLP பதிலாளர்களை நாங்கள் ஊக்குவிக்கிறோம். மறு வேலைவாய்ப்பு நடைமுறைகள் பற்றிய மிகவும் துல்லியமான மற்றும் அன்றன்று புதுப்பிக்கப்பட்ட தகவலைக் கண்டறிய, மனிதவள அமைச்சகம் (https://www.mom.gov.sg/employment-practices/re-employment) போன்ற அரசாங்க இணையத்தளங்களில் வெளியிடப்பட்ட வழிகாட்டுதல்கள் மற்றும் ஆலோசனைகளைப் பார்க்கவும். அவ்வாறு செய்வது, வேலையில் நீடிக்கும் முடிவுகள், பணிஓய்வு மற்றும் பிற நிதித் தேர்வுரிமைகளைத் திட்டமிடுவதில் உங்களுக்கு உதவலாம்.

## எங்களைத் தொடர்புகொள்ள

உங்கள் முகவரி அல்லது தொலைபேசி எண்ணை நீங்கள் மாற்றியிருந்தால், கருத்தாய்வை நிறைவுசெய்வதில் உங்களுக்கு ஏதேனும் வகையில் உதவி தேவையென்றால் அல்லது உங்களுக்கு ஏதேனும் கேள்விகளோ அல்லது கருத்துகளோ இருந்தால், தயவுசெய்து 6808 7910 என்ற எங்களுடைய நிலையத்தின் நேரடித் தொலைபேசி எண்ணில் தொடர்புகொள்ளுங்கள் (காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை, திங்கள் முதல் வெள்ளி வரை) அல்லது slp@smu.edu.sg என்ற முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்புங்கள். உங்களிடமிருந்து கருத்துகளைக் கேட்பதற்கு நாங்கள் எப்பொழுதும் மகிழ்ச்சியடைகிறோம்.

[1] முழு தாளையும் படிக்க, நீங்கள் https://ink.library.smu.edu.sg/soe_research/2443/ -க்குச் செல்லலாம்.